## உயர் கல்வி தொழினுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழ் தொழினுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர் சிறப்பு தரத்தில் மாவட்ட விதாதா அலுவலர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

உயர் கல்வி, தொழினுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழ் தொழினுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர் சிறப்பு தரத்துடன் தொடர்புற்ற வகையில், 2018.01.04 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகளிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற, இந்த அமைச்சின் முகாமைத்துவ சிறப்பு தரத்தில் மாவட்ட விதாதா அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களாவன 2018.07.30 ஆம் திகதியில் உள்ளவாறாக கூறப்படும் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றது. இப் பதவிக்கு 2018.07.30 ஆம் திகதி வரையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற விஞ்ஞான தொழினுட்ப அலுவலர்களும் விண்ணப்பிக்க முடியும்.

1. தகைமைகள்

1.1 கல்வித் தகைமைகள்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட விஞ்ஞான / கணித பட்டத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

1.2 அனுபவம்: விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அலுவலர் என்ற வகையில் திறமையும் திருப்தியும் மிக்க 15 வருட சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

1.3 பௌதீக தகைமை: சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உளத்தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு நாட்டின் எப் பாகத்திலும் கடமையாற்ற கூடியவராக இருத்தல் வேண்டும்

1.4 ஏனையவை:
- (1) விண்ணப்பதாரி நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்
- (11) பதவியுயர்வுக்கு உடனடியாக முற்பட்ட வகையில் திருப்பதிகரமான 05 வருட சேவைக்காலத்தை காலத்தை கொண்டிருத்தல் அவசியம்
- (111) பதவிக்காக ஆட் சேர்ப்பு தொடர்பில் கோரப்படுகின்ற சகல தகைமைகளும் விண்ணப்பம் அழைக்கப்படுகின்ற திகதியில் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்
- (1V) வயது பொருட்படுத்தப்படல் மாட்டாது

2. வெற்றிடங்களின் எண்ணிக்கை: 25

3. சம்பள அளவுத் திட்டம்: பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இல் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற இப் பதவிக்கான சம்பள குறியீடு MN7-2016. சம்பள அளவுத் திட்டம் ரூபாய் 41580 – 11755 – 18x1030 – 68425 (மாதாந்தம்) (பொது நிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 உள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற சம்பள கொடுப்பனவு மற்றும் ஏனைய விடயங்கள் மேற்கொள்ளப்படும்.

4. ஆட்சேர்ப்பு முறை: அரச சேவைகள் ஆணைக்குழுவின் 2019.04.26 ஆம் திகதியினை உடையதும் PSC/EST/03-03/08/2017 என்னும் இலக்கத்தினை கொண்டதுமான கட்டளைக்கு அமைவுற்றதாய் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் எழுத்தினால் ஆன பரீட்சை ஒன்றினை நடாத்தாது தகைமையானது நேர்முக பரீட்சையினூடாக மதிப்பீடு செய்யப்படும். இதற்கமைவுற, அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள புள்ளித்திட்டத்திற்கு அமைவுற அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட நேர்முக பரீட்சை சபையினால் பதவிக்கான தகைமையானது மதிப்பீடு செய்யப்படும். இதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகள் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்பட்டு அதற்கமைவுற ஆட்சேர்ப்பானது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படும்

அலுவலர்களின் எண்ணிக்கையும் நியமனம் செய்யப்படும் திகதியும் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

4.1 நேர்முக பரீட்சைக்கான தகைமையை மதிப்பீடு செய்வதற்கான புள்ளிவிபரத்திட்டம்

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | புள்ளிகளின் உடைவுகள் | உச்சப் புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| மூப்பு நிலை | சேவைக் காலப்பகுதியில் திறமையாக செயலாற்றுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அலுவலர் பதவியில் 15 வருட கால சேவைக் காலத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் சேவையாற்றியிருத்தல் போன்றவை ஆட் சேர்ப்புக்கான அடிப்படை தகைமைகளாக கருதப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1/2019 எனும் இலக்கத்தை கொண்ட சுற்றிக்கைக்கு அமைவுற அவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படும் அதிக சேவைக்காலத்தை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு அதிக புள்ளிகளும் ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் சேவைக்காலத்திற்கு அமைவுற விகிதாசார அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் | | 40 |
| திறன் | I. சேவைக்காலப்பகுதியில் தொழினுட்ப மாற்றீடுகளை / கருத்திட்டங்களை செயற்படுத்தக்கூடிய மட்டத்தின் அளவிற்கு நடைமுறைப்படுத்துகை செய்திருத்தல் வேண்டும் (பிராந்திய மட்டத்திலான ஒரு பிரச்சனைக்கு தீர்வு என்ற வகையில்)<br>(ஒரு கருத்திட்டத்திற்கு 5 புள்ளிகள்)<br>அலுவலரினால் செய்யப்பட்ட நேரடி பங்களிப்பினை திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் எழுத்தினால் உறுதிப்படுத்தல் வேண்டும் | 20 | 60 |
| | II. கணனி அறிவு<br><br>அ) டிப்ளோமா கற்கை நெறி – 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட கால வரையறை (720 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு அதிகமாக) (10 புள்ளிகள்)<br><br>ஆ) சான்றிதழ் கற்கைநெறி (3 மாதங்கள் - 6 மாதங்கள்) / 360-720 மணித்தியாலங்கள்) (08 புள்ளிகள்)<br><br>இ) சான்றிதழ் கற்கைநெறி (3 மாதங்களிற்கு குறைவாக / 360 மணித்தியாளங்களிற்கு குறைவாக) (05புள்ளிகள்)<br><br>(ஆகக் கூடுதலான ஒரு தகைமை கவனத்தில் கொள்ளப்படும்) | 10 | |
| | III. ஆங்கில மொழித்தேர்ச்சி<br><br>ஈ) டிப்ளோமா கற்கை நெறி – 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட கால வரையறை (720 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு அதிகமாக) (10 புள்ளிகள்) | 10 | |

| | | | |
|---|---|---|---|
| | உ) சான்றிதழ் கற்கைநெறி (3 மாதங்கள் - 6 மாதங்கள்) / 360-720 மணித்தியளங்கள்) (08 புள்ளிகள்)<br>ஊ) சான்றிதழ் கற்கைநெறி (3 மாதங்களிற்கு குறைவாக / 360 மணித்தியாலங்களிற்கு குறைவாக) (05புள்ளிகள்)<br>(ஆகக் கூடுதலான ஒரு தகைமை கவனத்தில் கொள்ளப்படும்) | | |
| | IV. உயர் கல்வி தொழினுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் நோக்கெல்லையை நிறைவேற்றும் வகையில் ஆற்றப்பட்ட பணிகளை அங்கீகரிக்கும் முகமாக வழங்கப்பட்ட பாராட்டு சான்றிதழ்கள்<br>(பொது படிவம் 230B இல் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள்) | 10 | |
| | V. அலுவலக விடய நோக்கெல்லை தொடர்பில் பிரசுரிப்புக்கள்<br>அ) புத்தகங்கள் பிரசுரிப்பு - ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்<br>ஆ) ஆராய்ச்சி பிரசுரிப்பு ஒவ்வொன்றுக்கும் 2.5 புள்ளிகள்<br>இ) பிரபாஸ்வர வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் மற்றும் அறிக்கைகள் / புதினப்பத்திரிகைகள் ஆக்கங்கள் / அறிக்கைகள் - ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்<br>பட்டப்படிப்பு நோக்கிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது | 10 | |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

- மேலே II மற்றும் III இணைப் பொருத்தவரையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட கற்கைநெறிகள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்
- இத்தகைய கற்கைநெறிகள் காலவரையறை மற்றும் செல்லுபடியாகும் திகதி என்பன பொருத்தமான சான்றிதழ்களினூடாக உறுதிப்படுத்தப்படாது விட்டால் இத்தகவல்கள் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமானது நேர்முகப்பரீட்சையை முன்னெடுக்கும் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாத சான்றிதழ்கள் அவதானத்தில் கொள்ளப்பட மாட்டாது.

5. விண்ணப்பிக்கும் முறை - இதனூடாக தரப்படும் விண்ணப்ப படிவமானது முறையாக நிரப்பப்பட்டு பதிவுத்தபாலில் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட முகவரிக்கு 10.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது அமைச்சின் நிர்வாக பிரிவிற்கு கையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தை கொண்டுள்ள கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச விதாதா அலுவலர் பதவிக்கு ஆட் சேர்ப்பு செய்தல் 2020" என எழுதப்படல் வேண்டும். இப் பதவிக்கான ஆட் சேர்ப்பு திட்டம் மற்றும் நேர்முக பரீட்சைக்கான தகைமை மதிப்பீடு என்பன அமைச்சின் வலைத்தளமான www.mostr.gov.lk தரப்பட்டுள்ளது

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவுற
அநுர திசாநாயக்க
செயலாளர்
உயர் கல்வி தொழினுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சு
3ஆவது தளம், செத்சிறிபாய கட்டம் 1 பத்திரமுல்லை

2020.01.21